கடவுள் துணை.

விநோத

ஜாலக்கண்ணாடி.

ஐந்தாம்பாகம்.

இஃது,
சிறுமணவூர்,
முனிசாமி முதலியார்
அவர்களால்
இயற்றப்பட்டு,

தமது
சென்னை சூளை,
சிவகாமிவிலாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1908.

உ

கடவுள் துணை.

விநோதஜாலக்கண்ணாடி.

காப்பு-விருத்தம்.

முந்திய பாரபரிய சத்திபாதி
மூவர்களை யுண்டுபண்ணி முதன்மையானும்
பிந்திய பெருமாளின் தங்கையானும்
பெருமையுடன் சிவனுடைய தேவியானும்
சிந்தையிற் முக்கோடி மும்மூர்த்தியோடே
செய்துவைத்தாய் சித்தர்பதி யென்பேர்தன்னை
உந்தனருளா லிந்த கணபதியைவேண்டி
ஓதினேன் சூத்திரம்பாகம் உலகமீது.

சகலவிஷமுறிக்க உபயோகவித்தை.

உண்டாவவித்தையடா உண்மைகேளு
ஒருவருக்கு மாகாத வெட்டிதன்னை
கண்டவுடன் துளைசெய்து விளாங்காய்போலே
கண்டவிய பழம்புளியை யுள்வைத்து
பண்டலத்தாற் சேறெடுத்து எட்டியென்ற
பாத்தாலே சிமிள்செய்து வைத்துக்கொள்ளு
சண்டாள விஷங்களப்பா யெதுவானாலும்
சாற்றிவிடு வெற்றிலையில் மிளகுபோலே.

மிளகுபோல் வெற்றிலையில் மடித்துக்கொள்ளு
மூன்றுநாள் கொடுத்துவிடு ஆறுவேளை
ஆவரிக்குப் பச்சரிசி கஞ்சியாகும்
அப்பமே முருங்கயிலை போட்டுக்காச்சு
உளவிந்த உப்புதனை சேர்க்கவேண்டாம்
உத்தமனே பத்தியத்தை பயமாய்க்காரு
களவாடவிடதுபோல் விஷங்களெல்லாம்
சண்மனையாய்ப் போகுமடா உண்மைதானே.

(வ-ம்) எட்டிமரத்தில் விளாங்காய் பருமப்படியான துவாரஞ் செய்து அவ்வளவு பழம்புளியை கொட்டைமுதலானது போ

ச்சிமிழம்போல் உள்ளேகுடைந்து அந்தகட்டிமாத்திரையை ஆப் படித்து நாற்பதுநாள் சென்று எடுத்து எட்டிமரத்தினால் சிமிழ்செய்து அதில் போட்டுவைத்துக் கொள்ளவும் தேள்-நன்ற நெருக்காய்-பூனை-எலி-பெருச்சாளி யண்டு ஓணான் பச்சோந்தி முதலானது யின்னமெதுவானாலும் (சாரை-சர்ப்பம்) தவிர மற்றதெல்லாம் மிளகுப்பிரமாணம் எடுத்து வெற்றிலையில் மடித்து சொல்லாமல் கொடுக்கவும் பத்தியம்பச்சரிசியும்பிடிமுருங்கயிலையும்போட்டு கஞ்சிகாய்ச்சிகொடுக்கவும் உப்பு ஆகாது கடும்பத்தியம் மூன்றுநாளைக்கு காலைமாலை இரண்டுவேளையும்.

அளந்தஅரிசி உபிரியாகுஞ்சாலம்.

ஓரளவாய் கின்னமது யிரண்டுசெய்து
  உள்ளளவு குறைந்தகின்னம் மேலேமூடி.
தாராளமாய்சபையில் வந்துநின்று
  நினைக்காதே அரிசிதனை கையால்வாங்கி
ஓரளவாய்கின்னமதில் அளந்துகொண்டு
  உள்ளளவு குறைந்தகின்னம் மேலேமூடி.
பாருங்கள் சபையோரே யென்றுதூக்கி
  பக்குவமாய் கிழ்மேலாய் கவிழ்த்துவையே.

(வ-ம்) கால்படி அரிசி பிடிக்கும்படியான கின்னம் ஒன்று செய்து அதுபோலவே இன்னம் ஒன்று செய்யவேணும் உ-வது கின்னத்தில் உள்ளே ஆழம் வைக்காமல் ரெண்டு பிடி அரிசி மீதியாகும் படியாய்மரம்கனமாகவைத்து செய்துக்கொண்டு அந்த இரண்டுக்கும் வர்ணம் ஒரேமாதிரியாய் பூசியிருக்கவேணும் அரிசியைக் கொண்டுவரச் சொல்லிஆழமான கின்னத்தில் தலை வழிக்க அளந்துக்கொண்டு மற்றகின்னத்தைமேலே மூடிசபையில் காட்டிக்கொண்டே தந்திரமாய்கிழ்மேலாய் கவிழ்த்துவைத்து விட்டு மெதுவாய் மேலிருக்கும் கின்னத்தை யெடுத்தால் அரிசி குபுகுபுவென்று பொங்கிவந்துவிடும். இது ஆச்சரியமாயிருக்கும் இதுபோலவே உளுந்து பயறு கடலை பட்டாணி நெல் முதலானதும் அளந்து அதிகமாய்க் காட்டலாம். 60

தண்ணிர் பொங்கும்சாலம்.

பாரப்பா குசவனிடம் உளவுகாட்டி
  பக்குவமாய் குடுவையொன்று செய்யச்சொல்லு
தூரப்பா கழுத்தடியில் புனலைப்போல
  சொந்தமாய் பதியவைத்து செய்துகட்டு

நீரப்பா நிறையவிட்டு மைவிலக்கி
நெடுந்தரையில் காட்டியதை கவிழ்த்துப்போடு
வீரப்பா தண்ணியெல்லாம் ஊத்தினாற்போல்
விளங்குமடா பாதிஜெலம் உள்ளேநிற்கும்
காரப்பா கண்மேலே விரலைவைத்து
கக்காமல் தூக்கியதில் வாயைவைத்து
கூரப்பா மூச்சுக்கொண்டு ஊதினக்கால்
குபுகுபென்று பொங்குமது குறுங்குவாரே.

(வ-ம்) குசவனிடம் குடுவையொன்றுசெய்து அந்த கழுத்தடியில் பொருந்தினாற்போல் புனல்மாதிரியாய் உள்ளேக்குபொருந்த வைத்து அந்த புனல் அடியில் ஒருதுவாரமும்குடுவைதொப்பை மையத்தில் ஒருதுவாரமும்வைத்து செய்துக்கொண்டு மேல்புறம் செகப்புவர்ணம்பூசி கண்ணைப்போல் துவாரஞ் செய்திருக்கிறே மாகையால் உடம்பெல்லாம் கண்களைப்போல் கருப்புவர்ணத்தில் எழுதி மூடியும் கருப்புவர்ணம் வைக்கவேணும் சபையில்வந்து துவாரத்தின்மேல் பெரிய விரலைவைத்து அழுத்தி பிடித்துக் கொண்டு சொம்பில் ஜெலம் கொண்டுவாசொல்லி இந்த குடுவையில் வார்த்து (சல்) மலையாள பகவதியென்று மேலேவைத்து ஓதோ குடுவையை கவிழ்த்து வைக்கிறேன் தண்ணியிருக்குமா போகுமாவென்று சொல்லி கவிழ்த்துவைக்கவும் வைத்தால் பாதிஜலம் கீழேபோய்விடும் துவாரம்மையமாகையால்பாதிஜலம் யிருக்கும் மறுபடியும் துவாரத்துமேல் விரலைவைத்து மூடியெடுத்து அந்ததுவாரத்தில் வாயைவைத்து மூச்சுபிடித்து ஊதினால் புனலிருக்கும் தொண்டிவழியால் தண்ணிமேலுக்கு பொங்கும் மறுபடியும்தொண்டியை பிடித்துக்கொண்டே கவிழ்த்தால் ஜலமிருக்காது அப்படியே தூக்கியூதினால் பொங்கிவழியும் இதுபோல ஜலமிருக்கிறவரையில் செய்யலாம் சந்தோஷப் படுவார்கள்.

பாம்புகடித்தபேர்க்கு விஷமிறங்குஞ்சாலம்.

பாம்பென்றால் படைநடுங்கு மென்றேசொல்வார்
பரியிருந்து கடித்துவிட்டால் உயிர்க்குச்சேதம்
தேம்புவார் திகைத்திடுவார் சோர்ந்துபோவார்
தரைதனிலே விழுந்துபல்லுங் கிட்டிக்கொள்வார்
சாம்பசிவ மென்றுதன்னைப் பணிவாரப்பா
சத்தியமாய் வைபுறையை கேளுகேளு
தாம்பரத்தால் உச்சியிலே மூன்றுவிரல்
தக்காளிச்சாறுபிழிந்து தேய்த்தாயானால்

வெப்பகன்று பீறுவார் நிரவிட்டால்
வாசகந்நால்சொல்லுங்கிறன் வாங்கிக்கொள்ளே.

(வ-ம்) பாம்புகடித்தவர்க்கு உடனே சன்னமாகிய பானெருட்டால்ஆவாள் உச்சியில் மூன்றுகிரல்கிரி அதிலே தக்காளிச்சாறு பிழிந்து உள்ளங்கையினால் அறைக்கி தேய்க்கதேய்க்க விஷந்தக்கி எழுந்திருப்பார்கள் ஜாகைகாச்சி கொடுக்கவும் இந்தமூலிகை இருவருக்கும் ஜெனகருக்குக் உயிருக்குயிரான மூலிகை யின்னங் கிழாநெல்லி குப்பைமேனியினும் விஷம்நிற்கும் அவசியமாய் சிறியாநங்கை செடிசமூலமும் உலர்த்தி பொடிப்பண்ணி வைத்துக் கொண்டால் மூன்றுவிரற்கடை பிரமாணம் எடுத்து ஒரு வெற்றிலையில் வைத்துகொடுத்தாலும் தண்ணியில்கலக்கி உள்ளுக்கு விடுத்தாலும் சீக்கிரம் விஷமிறங்கும் இதுவும் கைமுறைதான். 62

புட்டியில்மாம்பழங் காட்டுஞ்சாலம்.

வாங்குவாய்கருப்புநிற புட்டிஒன்று
வளமாக அடிபுனலை அறுத்தெடுத்து
சிங்காரமாம்பழங்கள் உள்ளேவிட்டு
சிராகதகரபுனல் செய்துமூடி
மங்காததாரதற்கு காச்சிப்பூசி
மாசபைக்குபழம்வேரே அருந்துமீந்து
இங்கிவர்கள் தின்றபழம் வருவிப்பேன்பார்
யென்றந்தபுட்டிதனை உடைத்துவாங்கே.

(வ-ம்.) ஒருகருப்பு புட்டியை அடியில் புனல்போலிருப்பதை தக்கினகருவியால் அறுத்தெடுத்துவிட்டு நல்லயினிப்பாகிய மாம்பழங்களை உள்ளேபோட்டு தகரத்தினால் புனலைப்போல்செய்து பிருவாகச்சொருகி வெட்டுந்தெரியாமல் தாரைக்காச்சி பூசிவைத்துக் கொள்ளவும் புட்டியில் போட்டபழம் எத்தனை எவ்வளவு பெரிசோ எந்தநிரமோ அதுபோல்கையில் எடுத்துக்கொண்டு சபையில்வந்து இதுபஞ்சாப்தேசத் திருந்து குட்டிச்சாத்தான் கொண்டுவந்தமாம்பழம் பாருங்கள்யென்று பில்லிபில்லியாயறுத்து அனைவருக்கும் கொடுக்கவும் முன்பழமிருக்கும் புட்டியில் பிடித்தவரையில் நல்லஜலம் விட்டுயிருக்கவேணும் அப்பாபத்மாநந்தசிஷ்யா தாகமெடுக்கிறது தண்ணிகொண்டுவா வென்று கேட்டு அந்தபுட்டியை வாங்கிசாப்பிடுவதுபோல் உதட்டில்வைத்து தண்ணிர்கிழ்மேலும் கீந்தும்படியாய் செய்து மேசைமேல் வைத்து சல் குட்டிச்சாத்தான் முன்னே அறுத்துக் கொடுத்த மாம்பழத்தை யிந்தபுட்டியில் வரச்செய்வாயா என்றா உன்சாம

த்தியங் காட்டு என்றுசொல்லி மாந்திரைக்கோல் எடுத்து ஒன்று-திரி-எக்-தோ-தின்-ஒருடு-ரெண்டு-மூறு-ஒன்று-ரெண்டு-மூறு என்று புட்டியைசுத்தி எல்லாரி ஒருருல்கட்டையெடுத்து புட்டியைபிடித்துக் கொண்டு சோக்கி அடித்துவிட்டால் பழங்கள் குபீலென்று வெளியில் விழும்மகா அதிசயமாயிருக்கும். 63

ஆகாயத்தில் விட்டபுறு புட்டியில்காட்டுஞ்சாலம்.

முன்போலேபுட்டிதனை பதப்படுத்தி
  முசியாமல் வெள்ளைப்புறு உள்ளேவிட்டு
பின்புறத்தைநசிலைசெய்து தாருபூசி
  பெருஞ்சபையில் தனியாகவந்துநின்று
அனைவர்க்குவெறுபுறு யெத்திக்காட்டி
  ஆகாயமார்க்கமதில் விட்டுப்போடு
யென்னமோ மந்திரங்கள் செய்தாற்போலே
  யெட்சணியையொதியதை யெடுத்துத்தாயே.

(வ-ம்) முன்போல ஒரு கருப்புபுட்டியை அடிபறுத்து இரண்டுவெள்ளைப்புறு கொண்டுவந்து ஒன்றைஉள்ளேவிட்டு நகாதட்டினால் புனல்போல்செய்து அடியில்சொருகி தாருபூசி யிருக்கவும் சபையில் வந்துமற்ற ஒருவெள்ளைப்புறுவை சபையில் காட்டிவாசலில்வந்து ஆகாயத்தில் விட்டுவிடவும் பின்பு இந்தபுட்டியை மேஜைமேல்வைத்து குட்டிச்சாத்தானகிய பொம்மையை அருகில்வைத்து மாத்திரக்கோலை கையில்பிடித்து பொம்மையைப் பார்த்து ஓ குட்டிச்சாத்தான் யிப்போது நான்விட்டபுறு இந்தபுட்டியில்வருமா வராதல்லவா சல் நீ எனக்கு அடிமையாயிருப்பது நிஜமானல் சிக்கிரம் இதில் வரும்படியாய் சொல்பார்ப்போம் என்றுமுன்சொல்லிய கணக்குகளையெல்லாம் சொல்லி இந்தபுட்டியையெடுத்து கிழேபளிலென்று தட்டினால் பறந்து போகும் இது ஜெகஜாலமாயிருக்கும். 64

திருட்டுபிடிக்குந் சாலம்.

கோடாமனையிடத்தில் களவுபோனல்
  கெடுதொழிலைச்செய்தவரை பிடிப்பதற்கு
ஆளடாவெவ்வொருவன் பெரும்பேறே
  அப்பனைதனித்தனியா சிட்டில்நாட்டி
கூடாவாசலிலே மண்பரப்பி
  சந்தேகமுள்ளவன்பேர் கிழேவைத்து
வேளடாஅக்கினியை மேலேமூட்டி
  மத்தியிலேநறுக்கைபெல்லாம் வேகப்பாரே.

கௌடா ஆடிபோடே வாரிக்கொண்டு
குடத்திலேகரைந்துவிட மிதந்துபோமே.

(வ-ம்) ஒருவீட்டில் களவுபோகுமாகில் வாசலில்மெழுகி கோலம்போட்டு பிள்ளையார்வைத்து அந்தவீட்டிலிருப்பவர் பேரையெல்லாம் பனவோலைகுருத்துகளில் வெவ்வேறு எழுதிக்கொண்டு வெரும்சீட்டு ஒன்று கூடவைத்துக்கொண்டு இரகசியமாய் சந்தேகமிருக்கும் ஆளை நிரவிசாரித்து ஒருசட்டியில் சாம்பலை வாரி வாசலில்வைத்து சந்தேகபேர்வழி சீட்டை தந்திரமாய்சாம்பலில் சொருகிபின்நெருப்பை வாரிசட்டியில்போட்டு வீட்டில் இருந்ததொகைபோல் சீட்டுகளையெல்லாம் அக்கினியில் போட்டுவிட்டு மந்திரஞ்செய்வதுபோல் விபூதியெடுத்து ஒருநாழிவரையில் ஓத அக்கினியில் கொஞ்சம்போட்டு அவ்வாவருக்குங் கொடுத்துவந்து பின்புஒருகுடத்தில் தண்ணீர்கொண்டு வரச்சொல்லி சாம்பலுடன் போட்டுகரைந்தால் அந்தசீட்டு மிதந்துவிடும்.

உலர்ந்துபோன இறாவை ஓடவிடும்சாலம்.

உலர்ந்ததொரு இராக்களிலே சிலதுவாரி
உத்தமனேகிளுவையிலே சார்பிழிந்து
கலந்திடுவாய் இறாவில்விட்டு பிசைந்துக்கொண்டு
கிணறலது துறவுகளில் விட்டாயானல்
கலகமதுயென்சொல்வேன் இறாக்களெல்லாம்
கடிப்பதுபோல் நடப்பதுபோல் ஓடுதல்போல்
விலகாதீ ஒருஜாமம் வேடிக்கைதான்
விளையாடும் பிள்ளைகள்போல் ஆடுந்தானே

(வ-ம்) உலர்ந்துபோன யிறாவைகொஞ்சம் அள்ளிவந்து கிளுவை இலையை பறித்துவந்துஉரலில்போட்டு இடித்து சார்பிழிந்து இராவில்விட்டுபிசைந்து கிணறுஅல்லது துரவுயிதுகளில் தூவிவிட்டுநின்றுபார்த்தால் உயிரோடிருக்கும்போது எப்படி ஓடுமோ அதுபோல் குருக்குநெடுக்குமாயோடும் சிலது இருகிறுவென்று சுழலும் பார்த்தவர்பிர மிப்பார்கள். 66

வலையில்மீன்படாத சாலம்

செம்படவர்பிழைப்புதனை கெடுக்குஞ்சாலம்
சொல்லுகிறேன்குணமடா செய்தால்கோஷம்
அம்புவியில்மெத்தவுண்டு செருப்படைதான்
அதனுடையசார்பிழிந்து வைத்துக்கொண்டு

சம்பாரமுடன் பெருங்காயம் கரைத்துத்தாக்கி
செம்படவர் வலைகளிலே வீசிப்போடு
வெம்பியவாறுதானும் மீன்படாது
விட்டிடுவார் வேறுதொழில் பார்ப்போமென்பார்.

(வ-ம்) செருப்படைச்சாறு அத்தோடுகூட பெருங்காயம் கரைத்துசெம்படவர் காயவைத்திருக்கும் வலைகளின்மீது விசிறி வைத்துவிட்டால் அந்தவலையில் மீன்படாது மறுபடியும் உழமண்ணுபோட்டு ஊரவைத்து வெக்காடுகொடுத்து தோய்த்து காயவைத்தால்தான் மீன்கள்படும் இந்தவேலைசெய்தால் பிழைப்புக்கு இடையூறாகையால் தோஷமென்பது. 67

தண்ணீரில் மிதக்குஞ் சாலம்.

தனந்தனமாய்குவித்தாலும் இந்தவித்தை
தாரணியில்சித்தர்முதல் சொல்லமாட்டார்
கனவதுமே பொய்யென்று நினைக்கவேண்டாம்
கிடாசரிவேர்தவளைநிணம் ரெண்டுங்கூட்டி
அனல்பறக்கமைபோலே அரைத்துக்கொண்டு
ஆள்படிக்குந்தடுக்கிலே தடவிப்போடு
இளம்பார்க்குளத்திலே தடுக்கைப்போட்டு
யில்லாத்தைக்கடந்தவன்போல் யோகஞ்செய்யே.

(வ-ம்) கிடாசரியென்கிற மூலிகைவேரும் பச்சைத்தவளை நிணமும் இந்த இரண்டும் வெணமட்டுஞ்சேர்த்து அரைத்து ஒரு ஆள்படுக்கிறதடுக்கில் ஒருபுரந்தனும்பூசி உலர்த்தி குளத்திலே போட்டுதான் விபூதி ருத்திராக்ஷம் முதலானதும் பலமாய் பூசி கையில்ஜெபமாலை எடுத்துக்கொண்டு மல்லாக்கப்படுத்து யீஸ்வரனைநோக்கி யோகஞ்செய்பவனைப்போல் யிருக்கவும் ஆனால் முதுகினால் கெட்டிக் கொண்டே யிருந்தால் யிக்கரையும் அக்கரையும் மிதந்துக்கொண்டே யிருக்கும் கண்டவர் பிரமிப்பார் கடவுளைப்போல வந்தனைவழிபாடுகளும் செய்வார் இதுவும் கைமுறைதான். 68

ஐந்தாம்பாகம்முற்றிற்று.